**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.295** **நாள்: 16.07.2026**

**திரு.வி.க.நகர் மண்டலம், நரசிங்க பெருமாள் கோயில் தெருவில் ரூ.49.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பல்நோக்கு மையக் கட்டடத்தினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் இன்று பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-78க்குட்பட்ட நரசிங்க பெருமாள் கோயில் தெருவில் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.49.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பல்நோக்கு மையக் கட்டடத்தினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் இன்று (16.07.2026) பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இந்த கட்டடம் நரசிங்க பெருமாள் கோயில் தெருவில் மாமன்ற உறுப்பினர் 2024-25ஆம் ஆண்டு வார்டு மேம்பாட்டு நிதியில் ரூ.49.70 இலட்சம் மதிப்பீட்டில் 750 சதுர அடி பரப்பளவில் தரைத்தளம், முதல் தளத்துடன் கட்டப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், துறைமுகம் சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.கே.சேகர்பாபு, மண்டலக்குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், நியமனக் குழு உறுப்பினர் திரு.சொ.வேலு, மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு** : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி